DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 18/2024** Date: 19.05.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 3** |
| Name | : | செந்தில் |
| Father's Name | : | சாக்கான் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 19.05.2025.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது நெல்லிநகரில் குடியிருந்து ரயில்நிலையத்தில் வேலை செய்துவருகிறேன். சம்பவத்தின்போது நான் ரயில் நிலையத்தில் டீ வியாபாரம் செய்துவந்தேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். கடந்த 02.08.2023 ம் தேதி இரவு 10.30 மணியளவில் மைசூர் – மயிலாடுதுறை செல்லும் ரயில் S3 கோச்சில் போலிசார் மற்றும் மக்கள் அனைவரும் கூட்டமாக இருந்தனர். நான் அருகில் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரியை போலிசார் அங்கிருந்து அழைத்து சென்றார்கள். நான் அங்கிருந்தவர்களை விசாரித்தபோது போலிசாரை கெட்டவார்த்தையால் திட்டி, அடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் வேறு எதுவும் நேரில் பார்க்கவில்லை. இது சம்பந்தமாக மறுநாள் காலை என்னை போலிசார் விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து அரசுதரப்பில் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 02.08.2023 ம் தேதி இரவு 10.30 மணியளவில் தருமபுரி ரயில்வே பிளாட்பாரம் எண். 2 ல் நின்றுக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அ.சா.1 யை தகாத வார்த்தையால் திட்டி, அவரை பணிசெய்யவிடாமல் தடுத்து அவரது

கையால் அ.சா.1ன் கன்னத்தில் அடித்தை நான் நேரில் பார்த்தாக கூறிவிட்டு தற்போது பொய்யாக மாற்றி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.